29th January 1972]

Lalitha Kala Academy

* @ 6 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the assets and liabilities of the Lalit Kala Academy have been settled; and

(*b*) if so, the details thereof ?

லளித கலா அக்காடமி

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) லளித கலா அக்காடமியின் இருப்புகளும் பொறுப்புகளும் முடிவு கட்டப்பட்டுவிட்டனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம். தமிழ் நாடு மாநில லளிதகலா அகாடமி (கலைக்கலைக் கழகம்) தற்போது செயலில் இல்லை. அகாடமியின் சொத்துக்களுக்கு சட்டபூர்வமாக உரிமைகோருபவர் யாருமில்லை. இந்திய அரசியலமைப்பின் 296வது பிரிவின்கீழ் காலக் கழிவு (Lapse) அரசு உறுபொருள் (escheat) அல்லது தகுந்த உரிமை கோருபவர்கள் எவரும் இலாமை (bona vacantia) காரணமாக சொத்து ஒன்று அரசைச் சேர்ந்துவிடும். அதாவது ஒரு சொத்துக்குச் சட்டபூர்வமாக உரிமை கோருபவர் இல்லாவிடில் அச்சொத்து அரசின் உடைமையாகிவிடும். அதன்படி இந்திய ஸ்டேட் வங்கியில் அகாடமியின் பெயரில் இருந்த ரூ. 253.93 மாநில அரசுக்கணக்கில் வரவு வைக்கப்படுமாறு ஆணையிடப்பட்டது. பின்வரும் இயங்கும் சொத்துக்களும் மாநில அரசிடம் உரிமை நிலைபெற வேண்டும் என்று ஆணையிடப்பட்டது. ஓவியங்கள், சிற்பங்கள், மட்பாண்டப்பொருட்கள், மேசை நாற்காலிகள், பிற கருவிகள், எழுது பொருள்கள், சஞ்சிகைகள், நூலக நூல்கள் முதலியன.

திரு வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இந்த லளித கலா அகாடமியை மூடிவிட்ட காரணத்தால், ஓவியம் பயிலும் மாணவர்களின் படங்களை ஆண்டு தோறும் காட்சிக்கு வைத்து பரிசுகள் வழங்கும் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்த முடியாமலிருக்கிறது என்பதையும், இந்த அகாடமியை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டிய முக்கியத்துவத்தையும் மனதில் கொண்டு இதைப் புதுப்பிக்க, உயிர்ப்பிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த அகாடமியை—கலைக் கழகத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்ற முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. அதற்கான வரைவுக்குறிப்பைத் தயாரிக்கும்படி கல்வித் துறைச் செயலாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். மத்திய அரசும் இதை ஒரு சென்டர் ஆக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டு, அதற்காக ரூ. 1,80,000 அளவில் ஒரு திட்டமும் தீட்டி, அதில் 50 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும், மீதி 50 சதவிகிதத்தை

@ Postponed from the list of questions for 24th January 1972.

[29th January 1972

மத்திய லளித கலா அகாடமி ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறது. இதற்காக இங்கே ஒரு ஏக்கர் நிலம் கேட்டு, அதையும் வழங்க அரசு முன்வந்தி ருக்கிறது. அப்படிப்பட்ட அக்காடமி போன்ற அமைப்பு உருவாக வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இந்த அகாடமி என்ன பணி யைச் செய்து வருகிறது, இது எந்தப் பொருளாதாரத்தைக் கொண்டு இயங்கு கிறது, என்ன செய்வதற்கு இதைப் புதுப்பிக்க வேண்டுமென்று சொல்லு கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சாகித்ய அகாடமியைப் போன்றது தான் இந்த அகாடமியும். சாகித்ய அகாடமி இலக் கியங்களைப் பற்றியது; இந்த லளித கலா அகாடமி என்பது ஃபைன் ஆர்ட்ஸ் என்ற கவின் கலைகளைப் பற்றியது. இதன் பெயரைக் கூட 'கவின் கலைக் கழகம்' என்று மாற்றியமைக்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல், இது பலருக்குப் புரியாமல் இருக் கிறது. ஆதலால் கவின் கலைக் கழகம் என்று வைத்து, சிற்பம், ஓவியம் ஆகிய வற்றில் வல்லுநர்களை ஊக்குவிக்கவும் அவர்களுடைய சிறந்த படங்கள் படைப் புக்களுக்குப் பரிசு வழங்கவுமான பணிகளை ஏற்கும். ஓவியம், சிற்பம் போன்ற கலைகளுக்கு நலந்தரும் கருத்துக்களை வகுக்கவும் இந்த அமைப்பு பயன்படும்.

திரு. எஸ். முத்துசாமி: தலைவரவர்களே, இந்த 'லளித கலா அகாடமி' யைத் தமிழ்ப்படுத்தியதுபோல், இதுபோன்று புரியாத சங்கங்களின் பெயர்களை யும் தமிழ்ப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவ்வப்போது எவ்வெ வற்றைத் தமிழ்ப்படுத்தி புரியும் அளவில் ஆக்க முடியுமோ, அந்த முறையில் ஆக்கிக்கொண்டு வருகிறோம்.

Attestation from Gazetted Officers

* @ 7 *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the difficulties of candidates seeking admission into Government Educational Institutions in procuring attestation from Gazetted Officers; and

(*b*) if so, the action taken thereon ?

அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரிகளிடமிருந்து சான்றொப்பம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு கல்வி நிறுவனங்களில் சேர விரும்பும் மாணவர்கள், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து சான்றொப்பம் பெறுவதில் இடர்பாடு களுக்குட்படுகின்றனரென்பதை அரசு அறியுமா?

@ Postponed from the list of questions for 24th January 1972.